# உங்கள் சுகாதார நலம் மற்றும் பணிவாய்ப்பு

## தொழிலாளர்களுக்கான முக்கிய தகவல்கள்

### ஒரு பணியாளருக்கு காய்ச்சலிற்கான அல்லது வேறு அறிகுறிகள் தென்பட்டால் என்ன செய்யவேண்டும்?

ஒரு பணியாளருக்கு காய்ச்சல், இருமல் அல்லது சுவாசிப்பதில் சிரமம் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் அவர் உடனடியாக வேறு நபர்களிடமிருந்து விலகியிருக்கவேண்டும். அத்துடன் உடனடியாக கத்தார் COVID-19 துரித தொலைபேசி அழைப்பான **16000** இனை தொடர்புகொள்ளவேண்டும். அவசரகால நிலைமையாயின் பணியாளர் அம்பியுலன்ஸ் வண்டியினை **999** எனும் தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பினை மேற்கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

### ஆண் / பெண் தொழிலாளியிடம் சுகாதாரநல அட்டை இல்லையென்றால் அவர் என்ன செய்ய வேண்டும்?

தற்போதைய நெருக்கடியின் போது, பரிசோதிக்கப்படுவதற்கு மற்றும் / அல்லது சிகிச்சையைப் பெறுவதற்கு ஒரு சுகாதாரநல அட்டையை மற்றும் / அல்லது QID-ஐ வைத்திருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை. இந்த சேவைகள் அரசாங்கத்தால் இலவசமாக வழங்கப்படுகின்றன.

### ஒரு தொழிலாளி எப்போது சுய தனிமைப்படுத்தலுக்குத் தன்னை உட்படுத்திக் கொள்ள வேண்டும்?

ஆண் / பெண் தொழிலாளி பின்வரும் நிலைமைகளின் கீழ் சுய தனிமைப்படுத்தலுக்குத் தன்னை உட்படுத்திக் கொள்ள வேண்டும் மற்றும் COVID-19 துரித தொலைபேசி இல **16000**ற்கு என்ற எண்ணுக்கு அழைக்க வேண்டும்:

- → இருமல், காய்ச்சல் அல்லது சுவாசிப்பதில் சிரமம் போன்ற COVID-19 இன் ஏதாவது அறிகுறிகளைக் காட்டுகிறார்.
- → COVID-19 நோய்த் தொற்றிற்கு உள்ளானவர் என அடையாளம் காணப்பட்ட நபர் ஒருவருடன் தொடர்புகளை மேற்கொண்டிருந்தால், அதுவும் அக்குறிப்பிட்ட நபருடன் தொடர்புகளை கொண்டிருந்த வேளைகளில் அவரிடம் நோய்க்கான அறிகுறிகள் தென்படாது இருந்திருந்தாலும் கூட.
- → நோய் பெருமளவில் பரவியுள்ள எந்த நாட்டிலிருந்தும் சமீபத்தில் திரும்பியுள்ளார்.

மேலும் தகவலுக்கு, பொதுச் சுகாதாரநல அமைச்சகத்தின் வலைத்தளத்தைத் தயவுசெய்து பாருங்கள் www.moph.gov.qa/

### தொழிலாளர்கள் எப்போது தனிமைப்படுத்தலில் வைக்கப்படுவார்கள்?

ஒரு தொழிலாளி தமது சோதனை முடிவுகளுக்காகக் காத்திருக்கும் போது, அவர்கள் COVID-19 ஐ கொண்டிருக்கலாம் என்று நம்பபப்பட்டால் (அவர்கள் நோய்த் தொற்றிற்கான அறிகுறிகளை வெளிப்படுத்தினால் அல்லது COVID-19 நோய்த்தொற்றுள்ள எவருடனாவது தொடர்பு கொண்டிருந்தால்) அரசாங்க அதிகாரிகளால் தனிமைப்படுத்தலில் வைக்கப்படலாம்,

### பணியாளர் ஒருவர் பரிசோதனைகளிலிருந்து Covid-19 நோய்த் தொற்றிற்கு உள்ளானவர் என உறுதிப்படுத்தப்பட்டால் யாது நடைபெறும்?

COVID-19 க்கு ஒரு தொழிலாளியின் பரிசோதனை முடிவுகள் பாசிட்டிவ் ஆக இருந்தால் முகைனிஸ் பகுதியில் உள்ள மையங்களில் அவர் தொற்றுநோய்த் தடுப்புக்காகத் தனிமைப்படுத்தப்படுவார் மற்றும் தேவையான அனைத்து மருத்துவ நலம்பேணல், உணவு மற்றும் உறைவிடம் ஆகியவை அவருக்கு இலவசமாக வழங்கப்படும்.

### ஒரு பகிரப்பட்ட இல்லத்தில் தொழிலாளர்கள் தனிமைப்படுத்தப்படுவதற்கோ அல்லது தொற்றுநோய்த் தடுப்புக்காகத் தனிமைப்படுத்தப்படுவதற்கோ ஏற்பாடு செய்வதற்கு யார் பொறுப்பு?

பொதுச் சுகாதாரநல அமைச்சகத்தின் கீழ் நெருக்கடி மேலாண்மைக்கான உச்ச உயர்வான குழுவின் மேற்பார்வையின் கீழ் பணிபுரியும் ஒரு சிறப்பு மருத்துவக் குழுவானது, தொழிலாளர்களின் தனிமைப்படுத்தல் மற்றும் தொற்றுநோய்த் தடுப்புக்காகத் தனிமைப்படுத்தலுக்கான சிகிச்சையை ஏற்பாடு செய்வதற்கான பொறுப்பைக் கொண்டுள்ளது. தொழிலாளர்களின் தனிமைப்படுத்தலை அல்லது தொற்றுநோய்த் தடுப்புக்காகத் தனிமைப்படுத்தலை ஏற்பாடு செய்வதற்கு முதலாளி பொறுப்பல்ல.

### செல்லுபடியாகும் QID இல்லாத தொழிலாளர்கள் தேவைப்பட்டால் சிகிச்சை பெற முடியுமா?

அனைத்து தொழிலாளர்களும் தேவையான அனைத்து சிகிச்சையையும் இலவசமாகப் பெறுவார்கள், அவர்களின் தகுதிநிலை பொருந்தாது.

## தொழிலாளர்கள் தனிமைப்படுத்தலில், தொற்றுநோய்த் தடுப்புக்காகத் தனிமைப்படுத்தலில் இருக்கும் போது அல்லது சிகிச்சை பெறும்போது அவர்களுக்கு இன்னும் ஊதியம் வழங்கப்படுமா?

அனைத்து தொழிலாளர்களும் தனிமைப்படுத்தலில், தொற்றுநோய்த் தடுப்புக்காகத் தனிமைப்படுத்தலில் இருக்கும் போது அல்லது சிகிச்சை பெறும்போது, அவர்கள் நோய் விடுப்புப் பலன்களைப் பெறுவதற்குத் தகுதியுள்ளவர்களாக இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் அதைப் பொருட்படுத்தாமல் அவர்களுக்கு அடிப்படை ஊதியம் வழங்கப்படும் மற்றும் அவர்கள் தங்கள் படிகளைப் பெறுவார்கள்.

## அரசாங்கத்தின் அறிவுறுத்தலிற்கமைய இடைநிறுத்தப்படும் துறைகளில் பணியாற்றும் பணியாளர்கள் தற்போதும் தங்களிற்கான அடிப்படைச் சம்பளம், வேறு கொடுப்பனவுகள், தங்குமிடம், உணவு போன்றவற்றைப் பெறுவார்களா?

ஆம். அனைத்து பணியாளர்களும் தங்களிற்கான அடிப்படைச் சம்பளம், வேறு கொடுப்பனவுகள் போன்றவற்றை தங்கள் தொழில்தருநர்களிடமிருந்து கட்டாயம் பெறவேண்டும்.

## நெருக்கடி காரணமாகத் தொழிலாளர் ஒப்பந்தங்கள் முடிவுறுத்தப்பட முடியுமா?

ஒப்பந்தங்களை முடிவுறுத்த முதலாளிகளுக்கு உரிமை உண்டு. இருப்பினும், பணிவாய்ப்பு முடிவுறுதல் என்பது அறிவிப்புக் காலம் மற்றும் தாய் நாட்டிற்கு திரும்பிச் செல்லும் பயணச்சீட்டு உள்ளிட்ட நிலுவையில் உள்ள அனைத்து உரிமையுடைமைகளையும் செலுத்துதல் உள்ளிட்ட தொழிலாளர் சட்டம் மற்றும் ஒப்பந்தத்தின் விதிமுறைகளுக்கு முழு இணக்கத்தன்மையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## தொழிலாளர்கள் தங்களால் பணியாற்ற இயலாத காலகட்டத்தை ஈடுசெய்ய அல்லது கம்பெனி குறைக்கப்பட்ட சேவைகளை வழங்குவதன் காரணமாக வருடாந்த விடுப்பைப் பயன்படுத்துவதற்கு அல்லது ஊதியமற்ற விடுவிப்பை எடுப்பதற்குக் கோரப்பட முடியுமா?

.நீண்ட காலத்திற்கு தொழிலும் பணிவாய்ப்பும் அழியாமல் நீடித்திருப்பதை கருத்தில் கொண்டு. இருதரப்பின் நலனுக்காக சேதத்தை குறைக்க இந்தக் காலகட்டம் முழுவதும் அனைவரும் ஒத்துழைப்பது முக்கியமாகும். எனவே, தொழில் நிறுத்தப்பட்டு, தொழிலாளிக்கு எந்த வேலையும் ஒதுக்கப்படவில்லை என்றால், தொழிலாளர்கள் ஊதியமற்ற விடுவிப்பு எடுப்பதற்கு அல்லது தங்கள் வருடாந்த விடுவிப்பைப் பயன்படுத்துவதற்கு, முதலாளிகளும் தொழிலாளர்களும் பரஸ்பரம் ஒப்புக் கொள்ளலாம். இருப்பினும், முதலாளிகள் தங்குமிட வசதி மற்றும் உணவு உட்பட மற்ற அனைத்து பலன்களையும் தொடர்ந்து வழங்க வேண்டும்.

## தொழிலாளர்கள் நாட்டிற்கு வெளியே இருந்தால், அவர்களால் திரும்பி வர முடியாவிட்டால், இது அவர்களின் பணிவாய்ப்பு தகுதிநிலையை எவ்வாறு பாதிக்கும்?

பணி நிலைமைகள் மற்றும் பலன்கள் குறித்து முதலாளியும் தொழிலாளியும் கலந்தாலோசிக்க வேண்டும். ஒப்பந்தத்தில் செய்யப்படும் எந்தவொரு சீரமைப்பையும் மறுக்க தொழிலாளிக்கு உரிமை உண்டு. பணிவாய்ப்பு முடிவுறுத்தப்பட்டால், இது அறிவிப்புக் காலம் மற்றும் நிலுவையில் உள்ள அனைத்து உரிமையுடைமைகளையும் செலுத்துதல் உள்ளிட்ட தொழிலாளர் சட்டம் மற்றும் ஒப்பந்தத்தின் விதிமுறைகளுக்கு முழு இணக்கத்தன்மையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## குறைக்கப்பட்ட அரசு சேவைகளின் இந்தக் காலகட்டத்தில் விசாக்கள் மற்றும் QID-கள் காலாவதியானால் தானாக நீட்டிக்கப்படுமா?

விசாக்களை நீடிக்க (அல்லது அதன் தகுதிநிலையைச் சரிபார்க்க) இந்த இணைப்பைப் பின்தொடர்க: https://portal.moi.gov.qa/visitvisaextension

QID-களை நீடிக்க (அல்லது அதன் தகுதிநிலையை சரிபார்க்க) தயவுசெய்து **Metrash2** செயலியைப் பயன்படுத்துக.

புதுப்பித்த தகவல்களுக்கு உள்துறை அமைச்சக வலைத்தளத்தைத் தயவுசெய்து பாருங்கள்.

## இதே நிபந்தனைகள் ஒரு வீட்டில் பணிபுரியும் வீட்டுத் தொழிலாளர்களுக்கும் பொருந்துமா?

மேலே உள்ள தகவல்கள் அனைத்தும் வீடுகளில் பணிபுரியும் வீட்டுத் தொழிலாளர்களுக்குச் சமமாகப் பொருந்தும்.

## இந்த நேரத்தில் தொழிலாளர்கள் தங்கள் பணிவாய்ப்பு அல்லது தங்குமிட வசதி குறித்து ஒரு புகாரை அல்லது பிரச்சினையைக் கொண்டிருந்தால் அவர்கள் என்ன செய்ய முடியும்?

தொழிலாளர்கள் நிர்வாக மேம்பாடு, தொழிலாளர் மற்றும் சமூக விவகாரங்கள் துறை அமைச்சகத்தை **16008** என்ற எண்ணுக்கு அழைப்பினை மேற்கொள்ளலாம் அல்லது info@adlsa.gov.qa என்ற மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ள வேண்டும்.